# நல்ல எறும்பு

ஓர் ஊரில் ஒரு சிறு எறும்பு இருந்தது. அது மிகவும் நல்ல எறும்பு. குழந்தைகளைக் கண்டால் அதற்கு மிகவும் ஆசை. குழந்தை அழுதால் அது அங்கேபோய் விளையாடும். அப்போது அந்தக்குழந்தை அழாமல் வேடிக்கைபார்க்கும். பள்ளிக்கூடம் போகும் சிறுவர்களைக் கண்டாலும் அந்த எறும்புக்கு மிகவும் விருப்பம். ஆனால், அவர்கள் தப்பிதம் செய்தால் அதற்குக் கோபம் வரும். அது அப்போது அவர்களைக் கடிப்பதும் உண்டு.

அந்த எறும்பு ஒரு சிறுவன் வீட்டுக்குச் சென்றது. அவன் பெயர் கோவிந்தன். அவன் நன்றாகப் பல் துலக்குவதில்லை; தினந்தோறும் குளிப்பதும் இல்லை. அவன் ஆடைகளும் அழுக்காகவே இருக்கும். ஆதலால், அந்த எறும்புக்குக் கோவிந்தன் மீது கோபம் அதிகம். அவன் ஒரு நாள் இரவு சிறிது கற்கண்டு தின்றான். பிறகு அவன் வாய் கழுவாமலே படுத்துக்கொண்டான்.

எல்லாரும் தூங்கும்போது அந்த எறும்பு மெதுவாகக் கோவிந்தன் அருகே சென்றது. பிறகு அது அவன் வாயை ‘வெடுக்’கென்று கடித்தது. அப்போது கோவிந்தன் ‘ஓ' என்று கூவி அழுதான். அந்த எறும்பு உடனே எங்கேயோ ஓடிப் போய்விட்டது.

நல்ல பிள்ளைகளை அந்த எறும்பு ஒரு நாளும் கடிப்பது இல்லை. கோவிந்தன் வீட்டுக்குப் பக்கத்திலே ஒரு வீடு இருந்தது. அது கோபாலன் வீடு. அவன் மிகவும் நல்லவன்; தாய் தந்தையர் சொற்படி நடப்பான்; பாடசாலைக்கு ஒழுங்காகப் போவான்;பாடங்களையும் நன்றாகப் படிப்பான்.

ஆதலால், அந்த எறும்பு அவனைக் கடிப்பதே இல்லை. கோபாலன் எப்போதும் அதிகாலையில் எழுந்து பல் துலக்குவான்; பிறகு படிக்க ஆரம்பிப்பான். அப்போது அந்தச் சிறு எறும்பு அவன் பக்கத்தில் இருந்து அவன் படிப்பதைக் கேட்டுக் கொண்டே இருக்கும்.

கோபாலன் தம்பியின் பெயர் கோதண்டன். அவன் வீட்டில் படிப்பதே இல்லை. தாய் தந்தையர் சொல்லைச் சிறிதும் கேட்பதில்லை; தன் அண்ணனுக்கும் அடங்கி நடப்பதில்லை. ஆதலால், அவன்மீது அந்த எறும்புக்குக் கோபம் அதிகம். ஆனால், அது அவனை அப்போது கடிக்கவில்லை; ஏன் என்றால் 'அவன் பள்ளியிலாவது படிக்கின்றானா?' என்று அது கவனிக்க விரும்பிற்று.

'எறும்பு எப்படிப் பள்ளிக்கூடம் போகும்?' என்று நீங்கள் கேட்கலாம். அதையும் சொல்லுகிறேன்; கோதண்டன் தன் சட்டைகளைப் பெட்டியில் பத்திரமாய் வைப்பதில்லை. அவைகளை, அவன் நினைத்த இடத்தில் கழற்றிப் போட்டு விடுவான். அந்த எறும்பு அதிகாலையில் எழுந்துசட்டைப்பையில் புகுந்து கொண்டது.

கோதண்டன் பள்ளிக்கூடம் போகப் புறப்பட்டான். அந்த எறும்பும் அவனோடு போயிற்று. அவன் தெருவிலே போகும் போது பத்துக் காசுக்கு வேர்க்கடலை வாங்கினான். அதை அவன் வழி முழுவதும் தின்று கொண்டே சென்றான்.

பிறகு அவன் பாடசாலைக்கு அருகே வந்ததும் மிகுந்ததைத் தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். தின்பண்டங்களைப் பள்ளிக்குள் கொண்டு போகக் கூடாது அல்லவா? ஆதலால், அந்த எறும்புக்குக் கோபம் அதிகமாகவே இருந்தது.

கோதண்டன் பாடசாலைக்குச் சென்றான். அங்கே அவன் சில பிள்ளைகளோடு சண்டை செய்தான்; பிள்ளைகள் உட்காரும் பலகையின்மேல் ஏறிக் குதித்தான். பள்ளிக்கூடத்துச் சுவரில் ஏதேதோ கிறுக்கினான்; ஏழைப் பிள்ளைகளைக் கேலி செய்தான். இவைகளை எல்லாம் அந்தச் சிறு எறும்பு அவன் சட்டைப்பையிலிருந்து, மெதுவாகப் பார்த்துக்கொண்டே இருந்தது.

மணி அடித்ததும் பிள்ளைகள் எல்லாரும் தம்தம் வகுப்பிலே போய் உட்கார்ந்தார்கள். கோதண்டனும் தன் வகுப்பை அடைந்தான். ஆனால், அவன் ஆசிரியர் சொல்வதைக் கவனிக்கவே இல்லை. அவன் தன் புத்தகத்தை முகத்துக்கு நேராக மூடிக் கொண்டான். மெதுவாக அடுத்தப் பையனோடு பேசிக்கொண்டே இருந்தான்.

பிறகு அவனை ஆசிரியர் சில கேள்விகள் கேட்டார். அப்போது அவன் பனைமரம் போல் நின்றான்; ஆந்தை போல் விழித்தான். ஆதலால், ஆசிரியர் அவனை பெஞ்சியின் மேல் நிற்க வைத்தார்.

அந்தச்சிறு எறும்பும் எல்லாவற்றையும் அப்போது கவனித்துக் கொண்டேதான இருந்தது. பெஞ்சியின்மேல் ஏறி நிற்கும்போது கோதண்டன் வருந்தவில்லை.

அவமானம் என்றும் எண்ணவில்லை. அவன் அவ்வாறு நின்று கொண்டே ஆசிரியருக்குத் தெரியாமல் பக்கத்துச் சிறுவன் காதைப் பிடித்துக் கிள்ளினான்; அச்சிறுவனுடைய தலையின்மேல் ஒரு சிறு காகிதத்தைக் கிழித்து வைத்தான்; பிறகு முகத்தைப் புத்தகத்தால் மூடிக்கொண்டு சிரித்தான்; குரங்கு போல் கூத்தாடினான்.

அப்போது ஆசிரியர் அவனைப் பார்த்தார். அவன் பூனைபோல் பேசாமல் இருந்தான். அவன் சட்டைப் பையில் ஒளிந்திருந்த எறும்பு அப்போதும அவனை ஒன்றும் செய்யவில்லை சிறிது நேரம் கழிந்தது; ஆசிரியர் கரும் பலகையில் ஏதோ எழுதிக் கொண்டு இருந்தார். அப்போது கோதண்டன், அவர் எழுதுவதைக் கவனிக்கவே இல்லை. தன்னிடம் இருந்த வேர்க்கடலையில் சிறிது எடுத்துத் தின்பதற்காக அவன் மெதுவாகத் தன் சட்டைப் பையில் கையை விட்டான்.

உடனே அந்த எறும்பு மிக்க கோபத்துடன் அவன் கையை நன்றாகக் கடித்து விட்டது. அப்போது அவன் ‘அப்பா – அம்மா,’ என்று கத்திக் கொண்டே கையைப் பார்த்தான். அவன் சுட்டு விரலில் அந்த எறும்பு கடித்துக்கொண்டு இருந்தது. அந்த எறும்பைக் கண்டதும் கோதண்டன் மிகவும் கோபம் கொண்டான். அதனை அவன் அப்போதே கொன்றுவிட எண்ணினான். ஆனால் அது எப்படியோ தப்பித்துக் கொண்டு ஓடிப்போய் விட்டது. சிறிது நேரத்திற்குள் அந்த எறும்பு அவ்வகுப்பு முழுவதும் சுற்றி வந்தது. அப்போது ஒரு சிறுவன் காலை ஆட்டிக்கொண்டு இருந்தான். அன்றியும் அவன் பாடத்தைச் சிறிதும் கவனிக்கவே இல்லை. ஆதலால் அந்த எறும்பு அவனையும் ‘வெடுக்’ கென்று கடித்துவிட்டு வேகமாய் ஓடிப்போய் விட்டது.

பிறகு அவ்வெறும்பு அடுத்த வகுப்பை அடைந்தது. கோவிந்தன் அந்த வகுப்பிலே தான் வாசிக்கிறான். ஆதலால் அந்த எறும்பு அவனைப் பார்த்துச் செல்லவே அங்கு வந்தது. அது வகுப்புக்குள் நுழைந்து சிறிது தூரம் சென்றது. அங்கே ஒருவன் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தான்; மற்றொருவன் வேறு வேலை செய்து கொண்டு இருந்தான்; வேறு ஒருவன் அடுத்த சிறுவனோடு பேசிக்கொண்டு இருந்தான். இவர்களை எல்லாம் அந்த எறும்பு கடித்துக் கொண்டே சென்றது. ஆனால் அது ஒருவர் கையிலும் அகப்படவே இல்லை.

அந்த எறும்பு பலரையும் இவ்விதம் கவனித்துக் கொண்டு அவ்வகுப்பைச் சுற்றி வந்தது.